சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.22/2023

பெயர். திரு. சுரேஷ்பாபு த/பெ. சண்முகம் நாள். 24.07.2025

**மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) என் சொந்த ஊர் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஆகும். ஊனமலை கிராமத்திற்கு வந்து 18 வருடங்கள் ஆகின்றன. நான் கம்பியூட்டர் மார்க்கெட்டிங் பணி செய்து வருகிறேன். நான் சென்னை அண்ணாநகரில் உள்ள ரிச்சி சாலையில் பணி செய்து வருகிறேன். நான் சென்னையில் சிறிது காலம் தங்கி பணி புரிந்து பின்னர் ஊனமலையில் இடம் வாங்கி வீடு கட்டி அங்கிருந்து சென்னைக்கு 15, 16 வருடங்களாக சென்று வருகிறேன். நான் சனி, ஞாயிறுதான் வீட்டிற்கு வருவேன் என்றால் நான் தினமும் சென்னை சென்றுவருவேன். நான் காலை 10 மணி அளவில் வீட்டில் இருந்து கிளம்பி பணி செய்து இரவு 8.00 மணி அளவில் வீட்டிற்கு வருவேன். ஊனமலையில் என் வீடு எங்குள்ளது என்றால் அருந்ததியர் காலனியில் உள்ளது. மனுதாரர் வீடு என் வீட்டில் இருந்து 200 மீ தள்ளி உள்ளது என்றால் 20 மீ தள்ளி உள்ளது. மனுதாரர் எனக்கு 12 வருடங்களாக பழக்கம். அவரின் குடும்பத்தினரும் எனக்கு நல்ல பழக்கம். மனுதாரரின் தகப்பனாருடன் சேர்ந்து நான் 2019 தேர்தலில் மனுதாரரின் தந்தை கிராம தலைவர் பதவிக்கு போட்டியிட்டதால் அவருடன் சேர்ந்து நான் தேர்தல் வேலை செய்தேன்.

2) மனுதாரரின் தகப்பனாரும், மனுதாரரின் மூத்த சகோதரரும் எத்தனை வருடங்களாக தனிக்குடும்பமாக உள்ளனர் என்றால் சுமார் 6, 7 வருடங்களாக உள்ளனர். மனுதாரரின் தந்தை கால்நடை மேய்பவராக உள்ளார் என்றால் சரிதான். மனுதாரரின் தகப்பனார், மனுதாரரின் சகோதரரை தன்னுடன் கால்நடைகள் மேய்க

அழைத்ததால்தான் அவர்களுடன் பிரச்சனை என்றால் எனக்குத் தெரியாது. மனுதாரரின் தாயார் ஊனமலையில் உள்ள ஒரு கிரஷரில் வேவை செய்து வருகிறார் என்றால் சரிதான். அவரும் காலை வேலைக்குச் சென்று மாலை தான் வீடு திரும்புவார் என்றால் நான் வேலைக்கு செல்வதால் எனக்கு தெரியாது. மனுதாரர் எனக்கு பழக்கமே தவிர அவர் வீட்டிற்கு நான் சென்றது கிடையாது என்று சொன்னால் எப்பொழுதாவது ஒரு முறை சென்று வருவேன். முதல் விசாரணை வாக்குமூலம் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

3) முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் என் கண் முன்னே நடைபெறவில்லை என்றால் சில விஷயங்கள் என் கண் முன்னே நடந்தது, சில விஷயங்கள் மனுதாரர் சொல்லி தெரியும். நேராக பார்த்த சம்பவங்களை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாகப் பார்த்த சம்பவம் என்பது போலிசார் மனுதாரரை விசாரித்தபொழுது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. கணவன், மனைவி இடையே இருக்கும் பிரச்சனை பற்றி எனக்குத் தெரியாது என்றால் அண்ணன் மகளை மனுதாரர் தூக்கினால் எதிர்மனுதாரர் சண்டைபோடுவார், அலைப்பேசியில் யாருடன் பேசினார் என்று எடுத்துப் பார்ப்பார், மனுதாரர் வேலை விட்டு வந்தால் அவருக்கு தேவையான பணிகளை எதிர்மனுதாரர் செய்வதில்லை. மேற்கண்ட விவரங்கள் மனுதாரர் கூறிதான் எனக்கு தெரியும் என்றால் ஏற்கனவே எனக்கு அது தெரியும். மேற்கண்ட விவரம் சம்மந்தமாக மனுதாாரின் பெற்றோர் எதிர்மனுதாரரை கண்டித்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிர்மனுதாரர் தன் மாமா பாஸ்கர் என்பவருடன் தவறான உறவு முறையில் ஈடுபட்டார் என்ற விவரத்தை நான் கூறினேனா அல்லது மனுதாரர் கூறினாரா என்றால் நான்தான் கூறினேன். மேற்கண்ட விவரம் மனுதாரர் சொல்லி எனக்குத் தெரியும்.

4) எதிர்மனுதாரர் தன் மாமாவுடன் உறவு வைத்துள்ளார் என்று கூறுவதற்கு

மனுதாரரின் பெற்றோரிடம் நான் எதுவும் கேட்கவில்லை. அவரும் என்னிடம் எதுவும கேட்கவில்லை. மனுதாரர், எதிர்மனுதாரர் திருமணத்திற்கு நான் சென்றேன். திருமணம் ஆகி 3 மாதத்தில் எதிர்மனுதாரர் கரு தரித்தார் என்றாலும், ஆறாவது மாதத்தில் சீமந்தம் செய்தார்கள் என்றாலும் எனக்கு தெரியாது. எனவே சீமந்தம் அன்று மனுதாரர் வீட்டில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எதனால் எதிர்மனுதாரர் தன் தாய் வீட்டிற்கு சென்றார் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு குழந்தை பிறந்தபொழுது மனுதாரர் உடன் இல்லை. மனுதாரர் தன் அண்ணிக்கு குழந்தை பிறந்தபொழுது மருத்துவமனையில் உடனிருந்து பார்த்துக் கொண்டார் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

5) எதிர்மனுதாரர் குழந்தை பிறந்து 5 மாதங்கள் கழித்து குழந்தையுடன் ஆட்டோவில் மனுதாரரர் வீட்டிற்கு வந்த பொழுது மனுதாரரும், அவரது பெற்றோரும் அவரை அடித்து துரத்தி விட்டனர் என்றால் இல்லை, ஆனால் பிரச்சனை நடந்தது. என்ன பிரச்சனை நடந்தது என்றால் நான் சத்தம் கேட்டு மனுதாரர் வீட்டிற்கு சென்று பார்த்தபொழுது எதிர்மனுதாரர் தன் செருப்பால் மனுதாரின் தந்தையை அடிக்க ஓங்கினார், அதற்கு மனுதாரரின் தகப்பனார், தன்னுடைய செருப்பை எடுத்து தன் தலையில் அடித்துக் கொண்டார். ஆனால் வீட்டிற்குள் அவரை அழைக்கவில்லை என்றால் மேற்கண்ட சம்பவமே வீட்டிற்குள் தான் நடந்தது. நான் செல்வதற்கு முன்பு அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பிறகு எதிர்மனுதாரர் தன் சித்தியுடன் மனுதாரர் வீடடிற்கு சென்றது எனக்குத் தெரியாது. மேற்கண்ட சம்பவத்திற்குப் பிறகு எதிர்மனுதாரர் மேல்மருவத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேல் மருவத்தூர் காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை. எதிர்மனுதாரருக்கு வாய் கோனலாக உள்ளது என்று நான் கூறுவது மனுதாரர் சொல்லிதான் எனக்குத் தெரியும். மனுதாரரின் உறவினர்கள் சுமார் 7, 8

குடும்பத்தினர் உள்ளனர். அனைவரும் அருகே உள்ளனரா என்றால் சிறிது தூரம் தள்ளி உள்ளனர்.

6) மனுதாரரின் தகப்பனார் தேர்தலில் தோல்வியுற்றார். மனுதாரரின் தகப்பனார் மற்றும் அவரது குடும்பத்தினர் எனக்கு நெருங்கிய பழக்கம் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ இன்றைய தேதிவரை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் எனக்குத் தெரியாது. நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ அறிவுரை கூறினேன், ஆனால், அவர் தன் தாய், தந்தையிடம் என்ன விவாதித்துள்ளார் என்று எனக்குத் தெரியாது.

மறுவிசாரணை – இல்லை.